## மட்டு. நகர் பொலிஸ்நிலையம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்

மட்டக்களப்பு நகரில் உள்ள பழைய பொலிஸ் நிலையம், பிரதிப்பொலிஸ் மா அதிபர் அலுவலகம், பொலிஸ் சுப்பிரீன்டன் விடுதி, இருதயபுரம் பொலிஸ் நிலையம் என்பன மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்ற இத்தாக்குதலினால் சில பொலிஸ்காரர் காயமடைந்தனர் தாக்குதல் நடைபெற்றபோது —04 ஆம் பக்கம் பார்க்க

## முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் தமிழரும் தேர்தலில் போட்டி

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் சில தமிழர்கள் முஸ்லிம் காங்கிரஸ், ஐ. தே. க சார்பில் போட்டியிடவுள்ளனர். புத்தளம் மாவட்டத்தில் உள்ள ஆராய்ச்சிகட்டுபிரதேசசபைக்கு உடப்பில் இருந்து ஐந்து தமிழர் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில்வேட்பு மனுத்தாக்கல் செய்தனர். அப்புத்தளை நகரசபை, பிரதேசசபை என்பவற்றுக்கு ஐக்கிய தேசிய கட்சி — 04 ஆம் பக்கம் பார்க்க

## ராஜீவை விரைவில் சந்திக்க பெருமாள் விரும்புகின்றாராம்

இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தியை சந்திப்பதில் வரதராஜப்பெருமாள் வெகு தீவிரமாக உள்ளாராம். தனது விருப்பத்தை அவர் தம்மை பாதுகாக்கும் இந்தியப் படையினரிடம் தெரிவித்துள்ளார். ஏப்ரலில் மத்திய பிரதேசத்துக்கு தேர்தல் பிரசாரத்துக்கு வரும் ராஜீவை பெருமாள் சந்திக்கலாம் என மத்திய உளவு அமைப்புகள் அவருக்கு உறுதி —04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 123 பிரமோதூத பங்குனி 16 ( 30-03-1991 ) சனி

## கருகம்பனையில் கொள்ளை

நேற்று முன்தினம் இரவு கருகம்பனை மிலெடியில் 3 வீடுகள் உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டதாக தெரிகிறது.

இப் பகுதியில் நடந்த இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இங்கு பொதுமக்கள் வெளியேறியுள்ளதாலேயே இத் திருட்டு நடைபெறுவதற்கு வாய்ப்பாக அமைந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப - 10)

## ராணுவத்திடம் அகப்பட்டு நேற்று தப்பிவந்தார்

நேற்று முன்தினம் காலை கீரிமலை கதிரவேலுச் சிறாப்பர் மடத்திலுள்ள பிள்ளையார் ஆலயத்திற்கு பூசைக்குச்சென்றிருந்த பாலசுப்பிரமணியம்(55) என்ற பூசகர் (மடபரிபாலகரும் இவரே) ராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே போர் மூண்டதும் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய தேரின் கீழ் ஒளித்துக் கொண்டார். பின் மாலை 5மணியளவில் வெளியே வந்தபோது ராணுவத்தினர் இவரைப்பிடித்துவைத்திருந்தனர். இவரை நேற்று முன்தினம் முழுநாளில் இருத்திய ராணுவத்தினர் நேற்று அதிகாலை விடுவித்தனர். இவரை விசாரணை — 04 ஆம் பக்கம் பார்க்க

★ இந்திய பாதுகாப்பு நலன்கருதி இறங்கிய

# அமைதிப்படை இலங்கையில் எதையுமே சாதிக்கவில்லை!

## இராணுவ சஞ்சிகையில் சர்தேஷ் பாண்டே

இந்தியத் தமிழர்களின், மனங்களின் கசப்புணர்வையும், இந்தப் பிராந்திய நாடுகளிடையே ஐயுறவையும், எமது ஜவான்களின் உள்ளங்களில் ‘ எதைச் செய்யப்புகுந்தோம், எதைச் செய்து முடித்தோம்’ என்ற குழப்பத்தையும் உண்டாக்கியதைவிட இந்திய அமைதிப்படை வேறு எதனையும் சாதிக்கவில்லை என்று இலங்கையில் அமைதிப் படைத் தளபதியாக விளங்கி ஓய்வுபெற்ற லெப். ஜெனரல் சர்தேஷ் பாண்டே ‘இந்தியன் டிபென்ஸ் றிவியூ’ சஞ்சிகைக்கு எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

1150 ஜவான்களை இழந்ததோடு, இரு மடங்கினர் ஊனமுற்றும், பல கோடி ரூபா செலவு செய்து 32 மாதங்கள் இலங்கையில் தங்கி நமது படை எதைச் சாதித்தது என்ற வினாவை அக் கட்டுரையில் எழுப்பியுள்ளார்.

இந்தியா தன் ‘பாதுகாப்பு நலன்’ என்று கருதிய ஒன்றுக்காகத் தனது அயல் நாடொன்றை எவ்வளவு தூரம் நெருக்குதலுக்கு உள்ளாக்கும் என்பது தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகள், அறிவு ஜீவிகள், ஆய்வாளர் உரக்கக் கூறும் ஏனைய விடயங்கள் எல்லாம் பக்க விளைவுகளே.

அறவே நம்பமுடியாத ஈ. பி. ஆர் எல் எவ் ஐயும், அதன் சகாக்களையும் அவசர அவசரமாக பயிற்றி ஆயுதம் வழங்கியது விவேகமற்ற செயல் என்பது ஏன் ஒருவருக்குத் தோன்றாது போயிற்று? எனவும்சர்தேஷ் பாண்டே குறிப்பிட்டுள்ளார்.

## மட்டக்களப்பு சுற்றிவளைப்பு ஹெலியும் தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வவுணதீவு, கரடியனாறு ஆகிய இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினரும், ரெலோ இயக்கத்தோரக்கும் பலும் இணைந்து விளாவெட்டுவான், கிருவாமுனை ஆகிய பகுதிகளைச் சுற்றிவளைத்தனர். இதில் இவர்களுக்கு உதவியாக, ஒரு ஹெலியும் துப்பாக்கிப்பிரயோகம் நடாத்தியது.

இதன் பின்பு விடுதலைப் புலிகளிற்கும், இராணுவத்தினருக்கும் இடையே நடந்த சண்டையில் புலிகள் தரப்பில் — 4 ஆம் பக்கம் பார்க்க

## நேற்று யுத்தநிறுத்த மீறல் !

## கீரிமலையில் ஷெல் வீச்சு இளம் பெண் மரணம்

அரசு யுத்தநிறுத்தம் அறிவித்திருந்தபோதும் படையினர் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கவில்லை.

நேற்றுக்காலை 10 மணியளவில் கீரிமலைப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் அளவெட்டி வடக்குப் பகுதியிலுள்ள தையல் நிலையமொன்றில் தைத்துக்கொண்டிருந்த வன்னியசிங்கம் சிவமணி (றதி) 26 வயது (அம்பனை) உயிரிழந்தார்.

கிழிலிட்டிப் பகுதியில் வீதியால் வந்துகொண்டிருந்த பொற்கொடி என்ற பெண்ணுக்கு கையில் காயமேற்பட்டது.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணம்

நேற்று முன்தினம் கீரிமலையில் நடைபெற்ற மோதலில் புலிகள் தரப்பில் கசன் (கந்தசாமி சிவகுமார் வட்டுக்கோட்டை) வீரமரணமடைந்தார். (71)

## தாண்டிக்குள முகாமருகில் காவலரண் மீது தாகதுதல்

வவுனியாவிலுள்ள தாண்டிக்குளம் இராணுவ முகாமிலிருந்து 400 யார் தூரத்திலுள்ள சாஸ்திரி கூழாங்குளம் பக்கமாகவுள்ள இராணுவத்தினரின் காவல் அரண் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தினர்.

நேற்று முன்தினம் இரவு 9 மணிமுதல் 12 மணிவரை இடம்பெற்ற இத்தாக்குதலின் போது 3 இராணுவத்தினரின் உடல்களை விடுதலைப்புலிகள் கண்டுள்ளனர். மேலும் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும்

## வட, கிழக்கில் யுத்தநிறுத்தம் அமுலில் இல்லை - சிறில்ரணதுங்க

வடக்கு, கிழக்கில் தற்போது யுத்தநிறுத்தம் ஏதும் அமுலில் இல்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவித்துள்ளார். படையினர் நடவடிக்கையை தொடருவரென அவர் தெரி

## கொழும்பு விடுதிகளில் இரவிலேயே பொலிஸார் தேடுதல்

கொழும்பு விடுதிகளில் தங்கியுள்ள தமிழர்கள் பெரும்

அழைத்துச் செல்லப்படுபவர்கள் ஒவ்வொரு நாளும் பகல்

## அவசரகாலச்சட்

## சில பிரிவுகள்

... தங்கியுள்ள தமிழர்கள் பெரும்பாலும் இரவு பதினொரு மணிக்குப்பின்னரே பொலிஸாரினால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

சில சமயம் அதிகாலை இரண்டு, மூன்று மணிக்கும் விடுதிகளுக்கு வந்து அங்கு தங்கியுள்ள தமிழர்களை விசாரணைக்காக அழைத்துச் செல்கின்றனர்.

இவ்வாறு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுபவர்கள் ஒவ்வொரு நாளும் பகல் பத்துமணிக்கே இரகசியப் பொலிஸாரினால் விசாரணை செய்யப்படுகின்றனராம்.

விசாரணை செய்யும் இரகசியப் பொலிஸார் முஸ்லிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் அவர்கள் யாழ்ப்பாணப் பகுதியை நன்கு தெரிந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது என்று கொழும்பில் இருந்து வந்த ஒருவர் தெரிவித்தார். (43)

# அவசரகாலச்சட்ட சில பிரிவுகள் தென்னிலங்கையில் நீக்கம்

தென்னிலங்கையில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தல்களை முன்னிட்டு நேற்றிரவு முதல் அவசரகாலச்சட்டத்தின் சில ஷரத்துகள் நீக்கப்பட்டுள்ளன.

இதற்கான உத்தரவு ஜனாதிபதி பிரேமதாஸவினால் நேற்று விடுக்கப்பட்டது. ஊர்வலம் நடாத்துதல், கூட்டம் நடாத்துதல், துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்தல் ஆகியவற்றுக்கான தடைகள் நீக்கப்பட்டுள்ளன.

இத்தடை நீக்கம் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பொருந்தாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

... தொடருமென அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கீரிமலையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை

— 4 ஆம் பக்கம் பார்க்க

... லப்பட்டிருக்கலாம் எனவும் கருதப்படுகிறது ஆயினும் சேதவிவரம் தெரியவில்லை இதன்போது 81 ரக துப்

— 4 ஆம் பக்கம் பார்க்க

# இராணுவம் கீரிமலையில் வீடுகளை தகர்த்து வருகிறது

கீரிமலை வலித்தூண்டல் புனித அன்னம்மாள் ஆலயத்திலும், கூவில் அண்ணமார் ஆலயத்திலும், நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்திலும் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் கடற்படை படகுகள் மூலமும் முனைத்தாக்குதல்கள் மத்தியில் வந்த இராணுவத்தினரும் கிருஷ்ணர் கோயிலிருந்து வந்த இராணுவத்தினருமே இப்பகுதியில் தங்கியுள்ளனர்.

இவர்கள் இப்பகுதியில் முதிர்ந்த பனை மரங்களை அகற்றியும், விமானக்குண்டு

— 4 ஆம் பக்கம் பார்க்க

# திருமலை நகரக் கடைகள் நண்பகலுடன் மூடப்படுகின்றன

திருமலை நகரப்பகுதியில் தினமும் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சந்தேகத்திற்கு இடமானவர்கள் இராணுவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இதன் காரணமாக நகர்ப்பகுதியில் சன நடமாட்டம் மிகவும் குறைவாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. கடைகள் பகல் 12 மணியுடன் மூடப்படுகின்றன. மக்கள் வெளியில் நடமாடுவது குறைவு. அலுவலகங்களுக்கு செல்லும் ஊழியர்களின் எண்ணிக்கையும் மிகவும் குறை

— 4 ஆம் பக்கம் பார்க்க

# வடபகுதி கடலில் கைதானவர் திருமலையில் விடுவிக்கப்பட்டனர்

வடமராட்சி கிழக்கு கடற்பிரதேசத்தில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு திருகோணமலை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்ட மூன்று குடும்பஸ்தர்களும் அண்மையில் திருமலையில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

# பம்பலப்பிட்டி சூதாட்ட விடுதி பொலிஸாரால் முற்றுகை

பிரபல சூதாட்ட நிலையம் மீது பொலிஸார் முற்றுகையிட்டு 15 லட்சம் ரொக்கப் பணத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

பம்பலப்பிட்டிப் பகுதியிலுள்ள பிரபல சூதாட்ட நிலையமொன்றை பொலிஸ் கோஷ்டி முற்றுகையிட்ட போது வெளிநாட்டுக் கரன்சிகள் உட்பட சுமார் 15 லட்

— 4 ஆம் பக்கம் பார்க்க

# தொகுதி உடன்பாடு காண 'ஜெ'யிடம் வரும் டில்லி தலைவர்கள்

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான தொகுதி உடன்பாடு காணுவதற்கான பேச்சுவார்த்தைகள் நடாத்த ராஜீவ்காந்தி இன்று சென்னையில் செல்வி ஜெயலலிதாவை சந்திக்கிறார்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

# திட்டமிட்டபடியே முத்தமிழ் விழா

முன்பு திட்டமிட்டபடியே முத்தமிழ் விழா நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 6-ம், 7-ம் திகதிகளில் மானிப்பாயிலும், 8-ம், 9-ம் திகதிகளில் புங்குடுதீவிலும், 10-ம், 11-ம் திகதிகளில் சாவகச்சேரியிலும், 12-ம், 13-ம் திகதிகளில் நெல்லியடியிலும், இறுதி 14-ம், 15-ம் திகதிகளில் பின்னர் அறிவிக்கப்படும் இடங்களிலும் நடைபெறவுள்ளது.

11-ந் திகதி நிகழ்ச்சியில்

...04 ஆம் பக்கம் பார்க்க

(நேற்றைய தொடர்ச்சி)

## சித்த வைத்தியத்தை இந்து மருத்துவம் என அழைக்கலாம்!

★ கே: சித்த வைத்தியத்திற்கும், ஆயுர்வேதவைத்தியத்திற்கும் வித்தியாசம் உண்டா? மருந்து வகையில், அல்லது சிகிச்சை முறையில் வித்தியாசம் இருப்பின் தெளிவு படுத்துங்கள்.

— ப: சித்தவைத்தியம், ஆயுர்வேத வைத்தியம் என்றஇரண்டிற்கும் 'இந்து மருத்துவம்' என்ற பெயரே பொருத்தமானது 'ஆயுள் வேதம்' என்ற சொல் ஒரு பரந்த சொல்லாக இருக்கின்றது. ஆயுள் என்பது ஆத்மா, சரீரம், மனம். இவற்றை அடக்குகின்றது. வேதம் என்பது அறிவைக் குறிக்கின்றது ஆகவே, ஆயுளைப்பற்றிய அறிவு, அல்லது விஞ்ஞானம்தான் ஆயுள்வேதமாகும். இதில் நாம் சரீரத்தைப்பற்றித்தான் படிக்கிறோம் ஆத்மா, மனம், இரண்டையும் படிப்பதற்குச் சமயம், தத்துவ சாஸ்திரம், யோக சாஸ்திரம், தியானம் போன்றவற்றின் தெளிவான அறிவுதேவை ஆயுள்வேதம் என்ற சொல் உலகிலுள்ள வைத்திய முறைகள் எல்லாவற்றையும் அடக்குகின்றது.

சித்த மருத்துவம் என்பது முற்காலத்துச் சித்தர்கள் ஐம் புலன்களை வென்று மனதைத் தம்வயமாக்கி, சித்த நிலையில் அருளிய உண்மைகளின் தொகுப்பே சித்த மருத்துவம் எனலாம். ஞானிகள் மனத்திற்கும் சரீரத்திற்கும் திருப்தி அளிக்கும் வகையில் இந்த உண்மைகளைக் கூறினர். ஞானிகள், முனிவர்கள், ரிஷிகள் அட்டமாசித்திகளைப் பிரயோகித்ததையும் குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் பிரம்மசம்பிரதாயம் (ஆயுள்வேதம்) சிவசம்பிரதாயம் சித்தம் என இருபிரிவுகள் காணப்பட்டன முன்னையது வடமொழியிலும், பின்னையது தமிழ் மொழியிலும் எழுதப்பட்டன. ஆயினும் இரு மொழிகளைச் சார்ந்த சமூகங்களும் ஒற்றுமையாக வாழ்ந்த காலத்தில், சாஸ்திர உண்மைகள், தத்துவங்கள் ஒன்றுக்கொன்று பரிமாறப் பட்டன. இதுவே ஆயுள்வேத சித்த மருத்துவங்களின் அடிப்படைத் தத்துவம் வித்தியாசப்பட்டமைக்குரிய காரணமாகும்.

ஆயுள் வேத மருத்துவத்தில் அரிஷ்டம், ஆசவம் முக்கியம் பெற்றதுபோல் சித்த மருத்துவத்தில் உலோக தாது வர்க்கங்கள் முக்கியம் பெறுகின்றன நாட்டிற்கு நாடு சுதேச வைத்திய முறை காணப்பட்டாலும், சுதேச வைத்திய முறை என்ற நிலையில், நாம் அதன் அபிவிருத்திக்கு உழைக்க வேண்டும்.

★ கே: உங்கள் பதிலில்ஆத்மீகவாடையும் வீசுகின்றது. விளக்கமான பதில்; நன்றி. சித்த வைத்திய மருந்துவகைகள் தயாரிப்பதற்குக் கஞ்சா, அபின் வகைகள் உபயோகப்படுகின்றன. இவற்றைப் பெறுவதற்கு அரசாங்கம் லைசன்ஸ் வழங்கியுள்ளதா?

— ப: அபின் வழங்குவதற்கு அரசாங்க அதிபர் அதிகாரம் பெற்றுள்ளார். அரசாங்க அதிபருடன் இரு வைத்தியர்கள் கொண்ட குழுதான் அபின் விநியோகிப்பதில் தத்துவம் பெற்றவர்கள். பொதுவாக அபின் சேர்த்து மருந்துகள் தயாரிப்பவர்களுக்கு 180 கிறெயின்ஸ் அபின் கொடுக்கப்படுகின்றது ஆனாலும், கூடுதலான அபின் சேர்ந்த மருந்து தயாரிப்பவர்களுக்கு இந்த அளவு அதிகரிக்கப்படவேண்டும் என்பதுதான் பொதுவான அபிப்பிராயம்.

★ கே: சித்த வைத்தியத்தில் செந்தூர பஸ்பங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. இவற்றைத் தயாரிப்பதற்குக் கெந்தகம், ரசம், வீரம், பூரம் போன்றவைகள் தேவை. சித்த வைத்தியர்கள் அதிகமாக இரசாயனப் பொருள்களையே கையாண்டுள்ளார்கள். ஆனால் இவற்றை இவர்கள் பெறமுடிய வில்லைப் போல் தெரிகின்றதே,

— ப: செந்தூர பஸ்பங்கள் தயாரிப்பதில் சித்த வைத்தியர்கள் சிறப்புற்றிருக்கின்றனர். அத்துடன் ரசம், கந்தகம், சாதிலிங்கம், மனோசிலை மற்றும் பாஷாண வகைகள் எடுக்கக்கூடியதாக உள்ளன. ஆயினும் வைத்தியர்கள் கூடுதலாகப் பாவித்தால்தான் விற்பனை செய்பவர்களும் கூட எடுப்பதற்கு முயற்சிப்பார்கள். இது பெரும் பிரச்சினை அல்ல.

# பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி

## பரீட்சைகள் ஏப். 18 இல் ஆரம்பம்

பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிக் கலைமுதல் தேர்வு 1989, 1990, 1991 கல்வியாண்டு மாணவர்களுக்குரிய பரீட்சைகள் கொழும்பு, கண்டி ஆகிய இடங்களில் ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இதற்கான அனுமதி அட்டைகள் பல்கலைக் கழகத்தினால் சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் கிடைத்துள்ளன. யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கு அடுத்துவரும் கிழமையில் அனுமதி அட்டைகள் வரலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது.

21 ஆம் திகதியிலிருந்தே தமிழ், புவியியல், அரசியல், பொருளியல், மெய்யியல், இந்துநாகரிகம் ஆகிய பாடங்கள் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (23)

### தொல்புரம் நூல் நிலையம்

தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தில் மீண்டும் வாசகர் வட்ட நூல்நிலையம் இயங்கி வருகின்றது. இந்நூல்நிலையம் சிறிதுகாலம் இயங்க முடியாது இருந்தது. இப்போது இவ்வாண்டின் புதிய நிர்வாகத்தினரின் முயற்சியினால் சிறப்பாக இயங்க ஆரம்பித்துள்ளது உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமாக புதிய நூல்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக நிர்வாகத்தினர் கூறினர். (ப-1)

## விவசாயத்துக்குரியகாணிகள் பாதுகாக்கப்பட வேண்டும்

விவசாயத் தேவைகளுக்கு பயன்படுத்தக்கூடிய காணிகளை வேறு எந்தப் பயன்பாட்டுக்கும் உட்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் யாழ் அரச அதிபருக்கு அறிவித்துள்ளது.

இதன்படி உற்பத்திக்கு ஏற்புடையதான காணிகளை இனங்கண்டு அவற்றை வேறு தேவைகளுக்கு பாவிக்க அனுமதிக்கக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெற் செய்கைக்கு உட்படுத்தப்படாத காணிகளை இனம் கண்டு அவற்றை நெற்காணி பதிவு இடாப்பிலிருந்து நீக்க வேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றைக் கண்காணிப்பதற்கும் மீள் பரிசோதனை செய்வதற்கும் தேசிய மட்டத்திலான குழுவொன்று அரச அதிபரால் நியமிக்கப்பட வேண்டும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. 66

## தமிழ்ப் பயணிகளிடம் முஸ்லிம்கள் காடைத்தனம்.

கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு ரயிலில் செல்லும் தமிழ்ப்பயணிகளை வாழைச்சேனையில் வைத்து முஸ்லிம் காடையர்கள் இம்சைப்படுத்துவதாகச்சொல்லப்படுகிறது.

ஆசனங்களில் அமர்ந்து வரும் தமிழ்பயணிகளை ஆசனங்களைவிட்டு எழும்புமாறு துன்புறுத்துவதுடன் ஆசனங்களை விட்டு எழமறுக்கும் தமிழ்ப் பயணிகளை இவர்கள் அடித்து துன்புறுத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (74)

## போலி விஸா, தஸ்தாவேஜு; கட்டுநாயக்காவில் நபர் கைது

போலி விஸா, தஸ்தாவேஜுக்களுடன் ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வந்த கும்பலொன்றின் முக்கிய நபரொருவர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப நபர் போலி விஸாவுடன் ஓர் தமிழ் வாலிபரையும், யுவதியையும் கனடாவுக்கு அழைத்துச் செல்ல முற்பட்டபோதே கைதானார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### மணமானோரும் வாலிபரும் மோதுவர் மென்பந்து போட்டியில்

உயிர்ப்பு விழாவை முன்னிட்டு 1941 ஆம் ஆண்டு தொடக்கம் வருடா வருடம் ஈச்சமோட்டையில் நடாத்தப்பட்டு வரும் மென்பந்து கிரிக்கெட்போட்டி, இவ்வருடமும் நடைபெறவுள்ளது.

மணமானோர் அணிக்கு திரு. ஏ. ஆர். ரூபசிங்கமும், வாலிபர் அணிக்கு செல்வன்

## தமிழக அரசியல்வாதிகள் உதிர்த்த நறுக்குகள்

★ ஜலுவான ராணியின் பணிவான வேலைக்காரர்கள்.

— 'தி வீக்'கில் தமிழ்நாடு காங்கிரஸ் பற்றி ஜெயலலிதா

★ பாராட்டுவதால் பணிந்து போவதாக அர்த்தமாகாது.

— ஆனந்தவிகடனில் வாழப்பாடி ராமமூர்த்தி

★ விடுதலைப்புலி தஞ்சை சாப்பிடுகிறவர். சுப்ரமணியம் சுவாமிநஞ்சைக் கக்குகிறவர்.

— அரங்கேற்றம் இதழில் ஒரு கேள்வி பதில்

★ ராஜீவ் காந்தி ஒரு வி. ஐ. பி. - வெரி இக்னரென்ட் பர்சன் (அறியாமை அதிகம் நிறைந்தவர்)

— இந்தியன் எக்ஸ்பிரஸில் தேவிலால்

★ பத்துப் பேர் ஆதரவு என்கிற எலும்புத் துண்டைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சந்திரசேகர் எதையுமே செய்வார்

— கல்கியில் கருணாநிதி

★ உங்கள் மகளை இன்று ஒருவருக்கு, நாளை இன்னொருவருக்கு எனத் திருமணம் செய்து வைக்க முடியுமா?

— கவர்னர்களை மாற்றுவது பற்றி, பிசினஸ் அன்ட் பொலிடிகல் அப்சர்வரில் பரீனானா

★ துப்பாக்கிகளின் சலசலப்பை சங்கீதமாக நினைப்பவன் தி மு க காரன்

— ஜூனியர் விகடனில் வை. கோபால்சாமி

★ நமது ஆட்சியில் கட்சித் தொண்டர்களுக்கு எதுவும் செய்யவில்லை நாம் செய்த தவறே அதுதான்.

— மு. க. ஸ்டாலின் சொன்னதாக ஜூனியர் விகடனில்

★ அதிகாரிகளை நம்பி அதிமோசம் போனேன்.

— கருணாநிதி

★ ஜெயலலிதா படித்த பெண்மணி. அவர் கருணாநிதியை விடசிறப்பாக ஆட்சி நடத்தக் கூடியவர்.

— டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி

யாழ் பல்கலைக்கழகம் - திருநெல்வேலி

மகாபொல கொடுப்பனவு

5 ஆம் 6 ஆம் தவணைப்பணம்

(பங்குனி, சித்திரை 91)

சாதிலிங்கம், மனோசிலை மற்றும் பாஷாண வகைகள் எடுக்கக்கூடியதாக உள்ளன. ஆயினும் வைத்தியர்கள் கூடுதலாகப் பாவித்தால்தான் விற்பனை செய்பவர்களும் கூட எடுப்பதற்கு முயற்சிப்பார்கள். இது பெரும் பிரச்சினை அல்ல.

நேரத்தைப் பார்க்கிறேன். பிற்பகல் மணி இரண்டரை. பகல் உணவு கூட உட்கொள்ளாது என்னுடன் இவ்வளவு நேரம் உரையாடிய பெருந்தன்மையையும், கடமை உணர்வையும் வியந்தவாறு நன்றி கூறி விடைபெறுகின்றேன். சித்த வைத்தியத்துறையின் அபிவிருத்தியே மூச்சாக இருக்கும் டொக்ரர் பவர்னி அந்த முயற்சியில் நிச்சயம் வெற்றி பெறுவார் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் புறப்படுகின்றேன்.

பேட்டி கண்டவர்: வி.பி·


- ☐ உங்களுக்குத் தேவையான புகைப்படங்கள்
- ☐ றபர் சீல்
- ☐ HALF TONE - LINE கலர் புளொக்ஸ் (BLOCKS).
- ☐ கலர் பிலிம் சுருள்கள்
- ☐ ஓவிய வேலைகள்
- ☐ கலர் பிலிம் சுருள்களைப் படமாக்குதல்
- ☐ பிறேம் போடுதல்
- ☐ லிரிக்கேஸ் போடுதல்

லிரிக்கேஸ் தயாரிப்பாளர்கள்

## கொழும்பு ஸ்ருடியோ

55, மணிக்கூட்டுவீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

245, நாவலர்வீதி, யாழ்ப்பாணம்.

03131


கெட்போட்டி. இவ்வருடமும் நடைபெறவுள்ளது.

மனமாவோர் அணிக்கு திரு. ஏ. ஆர். ரூபசிங்கமும், வாலிபர் அணிக்கு செல்வன் முரளிதரனும் தலைமை தாங்கி ஆடவுள்ளனர்.

இப்போட்டி வெகு சிறப்பாக நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளையும் திரு. சச்சி தவச்செல்வன் செய்து வருகிறார். (16)


## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கொடிகாமம் சுதேச வைத்தியர் வேலுப்பிள்ளை செல்லத்துரை ஆகிய எனது அடையாள அட்டையும், 486480360V இலக்க அடையாள அட்டையும் மிருசுவில் பழைய ஊாய்க்கால் சந்தியிலிருந்து பெண்கள் குடியேற்றத்திட்டம் நோக்கி வரும் வீதியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் நேர் முகமாகவோ, அல்லது கடித மூலமாகவோ தந்துதவும் படி பணிவுடன் வேண்டுகிறேன்.

தற்போதைய விலாசம் வே. செல்லத்துரை மே/பா க. கந்தசாமிக்குருக்கள் எழுதுமட்டுவாள், வடக்கு எழுதுமட்டுவாள். 03132


## 5 ஆம் 6 ஆம் தவணைப்பணம்

(பங்குனி, சித்திரை 91)

மேற்படி கொடுப்பனவு பின்வரும் மாணவர்களுக்கு கீழ்வரும் அட்டவணைப்படி செய்யப்படும்.

### முதலாம் வருட மாணவர்கள் (1989 /90)

| | | |
|---|---|---|
| கலைப்பிரிவு | 28. 03. 91 | 9. 00 — 12. 00 மு. ப |
| வர்த்தகப்பிரிவு | 01 04. 91 | 9. 00 — 12. 00 மு ப |
| வியாபார நிர்வாகப்பிரிவு | 03. 04. 91 | 1. 30 — 3. 00 பி. ப |
| மருத்துவபீடம் | 28. 03. 91 | 1. 30 — 3. 00 பி. ப |
| பௌதீக விஞ்ஞானப்பிரிவு | 01. 04. 91 | 9. 00 — 12. 09 மு. ப |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 03. 04. 91 | 1. 30 — 3. 00 பி. ப |

### இரண்டாம் வருட மாணவர்கள் (1988 / 89)

| | | |
|---|---|---|
| கலைப்பிரிவு | 05 04. 91 | 9. 00 — 12 00 மு. ப |
| வர்த்தகப்பிரிவு | 01 04 91 | 9. 00 — 12 00 மு. ப |
| வியாபார நிர்வாகப்பிரிவு | 03 04 91 | 1. 30 — 3. 00 பி. ப |
| மருத்துவ பீடம் | 05. 04 ·91 | 1. 30 — 3. 00 பி. ப |
| பௌதீக விஞ்ஞானப் பிரிவு | 01. 04. 91 | 9. 00 — 12 00 மு. ப |
| உயிரியல் விஞ்ஞானப்பிரிவு | 03. 04. 91 | 1. 30 — 3. 00 பி. ப |

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை:

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை

★ விவசாய பீட மாணவர்கட்குரிய கொடுப்பனவுகள் கிளிநொச்சியில் விவசாயபீடத்தில் வைத்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பதிவாளர்

03130

# 'தீர்மானம் எதுவாயினும் தலைவர் பிரபாவின் ஒப்புதல் பெற்றே ஆக வேண்டும்'

''எதிர்காலத்தில் எந்தத் தீர்மானத்தை எடுத்தாலும் அதற்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் அங்கீகாரத்தைப் பெற்றுத்தானாக வேண்டும்'' என்று சொழுப்பு நாளிதழ் ஒன்று தனது வாராந்த விமர்சனத்தில் தெரிவித்துள்ளது.

''வடக்கு கிழக்கில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக தமிழ்க் கட்சிகள் ஒழுக்களுக்கும், முஸ்லிம் கட்சிகளுக்கும் இடையே வேறுபாடுகள் தோன்றுகின்ற நிலையில் சர்வகட்சி மாநாட்டில் ஏற்புடைய தீர்வொன்றை தமிழ்க் கட்சிகள் முன்வைப்பது சாத்தியமாகுமா என்ற சந்தேகங்களும் பிறக்கின்றன.

''இராணுவத் தீர்வு வட, கிழக்குப் பிராந்தியத்தில் ஒழுமை நிலையைக் கொண்டு வரப்போவதில்லை என்பதையே தொடருகின்ற மோதல்களினால் ஏற்படுகின்ற உயிரிழப்புக்களும், சொத்து திரிழுப்புகளும் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

''வட, கிழக்குக்கான தனது பரவலாக்கல் திட்டத்தை வெளிப்படையாகக் கூறி அரசியல் நிகழ்வுகளை நகரச் செய்வதன் மூலமாக இத் தருணத்தில் கூட இலங்கை அரசாங்கம் நிலைமையின் கொடூரத்தை தணிக்க முடியும்.''

''அத்தகைய ஒரு நடவடிக்கையினால் மாத்திரமே சண்டைக்கு ஒரு முடிவைக் கொண்டு வரவும் அப்பாவிக் குடிமக்கள் தங்கள் வாழ்க்கையை அச்சமின்றித் தொடரவும் முடியும்'' என்றும் இதில் கூறப்பட்டுள்ளது.

## வழக்கு ஒன்று; தீர்ப்பு வழங்க மொழிகள் ஏழு

புதுடில்லியில் அபூர்வ வழக்கொன்று நடைபெற்றதாகவும் இவ் வழக்கில் 7 மொழிகள் பாவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அது ஒரு விடுதி: அந்த விடுதிக்குச் சொந்தக்காரன் ஒரு மலையாளி. அங்கு பல இனத்தவர்கள் தங்கியிருந்தார்கள். ஒருநாள் வீட்டின் சொந்தக்காரருக்கும், சிங்கள மாணவனுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாய் மாறவே அவ்வழியே சென்ற பிரான்ஸ் தேசத்துப் பாதிரியார் தலையிட்டுச் சமாதானம் செய்துவைத்தார். வீட்டுச் சொந்தக்காரன் மேற்கொண்டு அசம்பாவிதம் ஏதும் நடைபெறலாம் என்ற அச்சத்தினால் பொலிஸில் முறைப்பாடு செய்தார் அதனை விசாரிக்கவந்த தமிழ்ப் பொலிஸ்காரர் சுமுகமாகப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க எடுத்த முயற்சி பயனளிக்காததினால் வழக்குத் தாக்கல் செய்யவேண்டியதாயிற்று. வழக்காளியின் சாட்சி ஒரு தெலுங்குக்காரர். எதிரியான சிங்களவரின் சாட்சி ஒரு அரபுக்காரர். இவ் வழக்கில் சம்பந்தப்பட்ட அத்தனை பேருக்கும் தமது தாய்மொழியைத் தவிர வேறு மொழிகள் சரளமாய்ப் பேசவராது. எனவே நீதிபதியின் பாடு தர்மசங்கடமாய்ப் போய் விட்டது. ஈற்றில் மலையாளம், சிங்களம், பிரான்ஸ், தமிழ், தெலுங்கு, அரபு ஆகிய 6 மொழிகளுக்கும் மொழிபெயர்ப்பாளர்களை அமர்த்தி நடத்தினார் வழக்கின் தீர்ப்பை நீதிபதி இந்தியில் வழங்கினார். (16)

## சென்னை வீதியில் பெண்ணிடம் திருட்டு முயற்சி யாழ் வாலிபர் இருவர் கைது

சென்னையில் பெண்ணொருத்தியிடமிருந்து தங்கச் சங்கிலியை அபகரிக்க முயன்றதாக இரு யாழ் வாலிபர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்;

வீதியில் சென்று கொண்டிருந்த இப்பெண்ணின் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இவ்விரு வாலிபர்களும் அபகரிக்க முயன்றதாகவும் பஸ் கண்டக்டர் ஒருவர் இவர்களில் ஒருவரை மடக்கிப் பிடித்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகவும், பின்னர் மற்ற நபரும் பிடிபட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## கருப்பசாமிக்கு கொலை மிரட்டல்

அகில இந்திய வானொலியின் கொழும்பு நிருபருக்குக் கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அவருக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

அகில இந்தியவானொலியின் கொழும்பு நிருபராக கருப்பசாமி என்ற தமிழர் பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கள்ளினால் ஏற்படும் போதை கல்வீச்சில் முடிகிறதாம்

கட்டப்பிராயில் உள்ள கள்ளுத்தவறணை ஒன்று இரவில் அடிக்கடி கல்லெறிக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கள்ளுப்பிரியர்கள் கள் அருந்திவிட்டு 'குஷி'யாக இருக்கும்போது இந்தக் கல்லெறி இடம்பெறுகிறதாம். கல்லெறி சம்பவத்தினால் கள்ளுத்தவறணைக்கு அண்மையில் உள்ள வீடு ஒன்றின் ஓடுகளும் உடைந்துபோயுள்ளதாக வீட்டுக்காரரினால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. (53)

## 'குடிக்காதே தம்பி குடிக்காதே'

மக்கள் மதுபானம் அருந்துவதைத் தடுக்க தேசிய திட்டம் ஒன்று அரசினால் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத் திட்டத்திற்கென குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

விரைவிலேயே இத்திட்டத்தைச் செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-1)

## கல்வியங்காட்டில் வைத்து இருவருக்கு மரண தண்டனை.

1985 ஆம் ஆண்டு நல்லூர் பண்டாரக்குளம் வீதியைச் சேர்ந்த துரையம்மா என்பவரை மின்பாய்ச்சிக் கொலை செய்தமைக்காக நல்லூர் கோவில் வீதியைச் சேர்ந்த குமார் குணசேகரம் என்பவருக்கும், கோப்பாய் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம் என்பவருக்கும் நேற்று முற்பகல் 10 மணியளவில் கல்வியங்காடுச் சந்திக்கு அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மரண தண்டனை விதிக்கப்பட்டது. (53)

## 'அதிங் கொஞ்சங், கொஞ்சங் தமிழ் நமக்கும் தெரியுங்'

## யாழ் உ. அ. அ. பிரிவில் உதைபந்தாட்டப் போட்டிகள்

யாழ் உதவி அரசாங்க அதிபர் ... மற்றொரு கால் இறுதி ஆட்

வளைகுடாப்போர்:

ஒரு மாபெரும் வல்லரசை எதிர்த்து நின்ற சதாம் ஹுசைன், குறுகிய காலத்தில் செல்வாக்குமிக்க அரபுத் தலைவராக உயர்ந்துவிட்டார். அமெரிக்க பலத்தைக் குறைத்துமதிப்பிட்டுத் தன் நாட்டின் அழிவைத் தேடிய இம்மனிதர் வீழ்ந்தபின்னும் இலட்சோபலட்சம் அராபியர்கள் நெஞ்சில் நிறைந்திருக்கிறார்.

## சதாமின் சரணாகதி

யுத்தங்களின் தாய் என்று சதாம் ஹுசைன் கருதியது நிச்சயமாக இதை அல்ல. தரைப்போர் துவங்கிய சில நாட்களிலேயே கூட்டணிப்படைகள் அவரது பாலைவன அரண்களைப் பிளந்துகொண்டு நுழைந்தன. அச்சமும் வியப்பும் ஏற்படுத்தக்கூடிய அளவு தாக்கும் ஆற்றல் கொண்ட ஹெலிகொப்டர்கள், ஜெட் விமானங்கள், ஆயுதப்படைகள் இவற்றின் துணையுடன் ஆயிரக்கணக்கில் ஈராக்கியர்களை அவர்கள் யுத்தக் கைதிகளாகப் பிடித்துக்கொண்டு போனார்கள்.

### தப்புக்கணக்கு

கூட்டணிப் படைகளுக்குத் தனது படையினர் கடுமையான சேதம் விளைவிப்பார்கள். அதனால் கூட்டணிப் படைகள் தாக்குதலைக் கைவிட்டுவிடும் என்று சதாம் கணக்குப் போட்டார்.

''நாம் 5,000 அமெரிக்கர்களைக் கொன்றால் போதும், அவர்கள் சமாதானத்திற்காகக் கெஞ்சுவார்கள்'' என்று சதாம் ஹுசைன் உறுதியாகச் சொன்னார்.

### அமெரிக்காவின் உறுதி

ஆனால், தரைப்போர் துவங்கியபோது அமெரிக்கர்களை மண்ணைக் கவ்வ வைப்பது அவ்வளவு எளிதல்ல என்பது தெளிவாயிற்று. அமெரிக்கத் தளபதிகள் சற்றும் கலங்காத மன உறுதியோடு இருந்தார்கள். ஈராக்கின் பொருளாதாரக் கட்டுமானங்களை அழித்ததற்காக வருந்தவில்லை. தரைப்போரைப் பற்றி மீடியாக்கள் செய்தி வெளியிட அமெரிக்கா தடைவிதித்திருந்தது. ஒருவேளை தரைப்போரில் உயிர்ச்சேதம் அதிகம் இருந்தாலும் அதை அமெரிக்கர்கள் டி.வி.யில், பார்த்துவிட்டுப் போருக்கு எதிரான பேரணிகள் நடத்தக் கிளம்பிவிடக் கூடாது என்பது அதன் நோக்கம்.

### நேருக்கு நேர்

தரைப்போர் குதித்த ஆரம்பத்தில் சதாம் இறுமாப்புடன் இருந்ததற்கு ஒரு காரணம், ''நிஜமான சண்டை'' போடும் திறன் அமெரிக்கர்களுக்கு இடையாது என்று நினைத்ததுதான். வேகமாகப் பறக்கும் விமானங்களில் நுணுக்கமான கருவிகளை வைத்துக்கொண்டு போரிடுவது என்பது ஒன்று. நேருக்கு நேர் துப்பாக்கி கொண்டு போரிடுவது என்பது வேறு என்று அவர் நினைத்தார். அதிக சேதம் ஏற்பட்டால் அமெரிக்கர்கள் தாக்குப்பிடிக்க மாட்டார்கள் என்றும் சதாம் எண்ணினார்.

### கட்டாய ஆட்சேர்ப்பு

வியட்நாம் போரின்போது பணக்கார, நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த இளம் அமெரிக்கர்கள் கட்டாயமாகப் படையில் சேர்க்கப்பட்டு ஒரு அயல் மண்ணில் போய் போரிடும்படி பணிக்கப்பட்டார்கள். மாறாக, புதிய அமெரிக்கப் படை மிகத் தொழில்திறம் கொண்டது. சதாமின் படையில் பெரும்பகுதி கட்டாயத்தின் பேரில் சேர்க்கப்பட்டவர்கள். இரண்டு படைகளுக்கும் இடையே தொழில்நுட்ப ரீதியாக மிகப் பெரிய இடைவெளி இருப்பதால் ஏற்படக்கூடிய பாதகங்களைப் பற்றிப் பெரிய தப்புக்கணக்கு போட்டுவிட்டார் சதாம் என்று அவருக்கு நெருக்கமானவர்கள் சொல்கிறார்கள். ''வைக்கிங் ஓட்டும் வியட்நாமியர்கள் அமெரிக்கர்களைத் தோற்கடிக்க முடியும் என்றால் ஈராக்கியர்களாலும் முடியும் என்று சொல்லி அமெரிக்காவின் அதிநவீன தொழில்நுட்ப வலிமையை சதாம் ஒதுக்கித் தள்ளிவிட்டார்'' என்று உயர் வட்டாரத்தைச் சேர்ந்த ஒருவர் சொன்னார்.

### சொந்த மண்ணுக்காக...

''இரண்டு நிலைமைகளுக்கும் இடையே உள்ள அடிப்படை வித்தியாசத்தை அவர் அலட்சியப்படுத்திவிட்டார். வியட்நாமியர்கள் தங்கள் சொந்த மண்ணிற்காகப் போரிட்டார்கள். ஈராக்கியர்கள் ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு பகுதியைத் தங்கள் வசம் வைத்துக்கொள்ளப் போராடினார்கள்''.

வியட்நாமியர்கள் கெரில்லா யுத்தம் நடாத்துவதற்கு வாய்ப்பாக அங்கு காடுகளும் புதர்களும் இருந்தன.

## 'அதிங் கொஞ்சங், கொஞ்சங் தமிழ் நமக்கும் தெரியுங்'

மத்திய மாகாண பாடசாலைகளின் தமிழ் மொழித் தின விழாவில் மத்திய மாகாண முதலமைச்சர் திரு. டபிள்யு. பி. பி. திசநாயகா தமிழ் மொழியில் தனக்குத் தெரிந்தவரையில் உரையாற்றினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ் விழாவில் பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## 'வறுமை ஒழித்து சாதனை புரிய தேவை உழைப்பு'

ரஷ்ய வானவெளி வீரரான பீட்டர் கிளிம் சென்னை வந்திருந்தபோது பிரபல தொழிலதிபர் திரு. வி. ஜி. சந்தோஷம் அவருக்கு வி. ஜி. பி. தங்கக் கடற்கரையில் வைத்து வரவேற்பளித்துக் கௌரவித்தார். "விண்ணிலும், மண்ணிலும் சாதனை படைக்க மனிதனால் முடிகிறது. ஆனால் வறுமையை ஒழிக்க முடியவில்லையே" என்று அவரிடம் நிருபர்கள் குறிப்பிட்டபோது, அவர் சொன்னார்: ''ஏன் வறுமையை ஒழிக்க முடியாது? ஏழைக்குடும்பத்தில் பிறந்து டீக்கடையில் வேலை செய்த சந்தோஷம் இன்று இந்தியாவின் பிரபல தொழிலதிபர்களில் ஒருவராக விளங்குகிறார். நானும் ஓர் ஏழைக்குடும்பத்தில் பிறந்தவன்தான். வறுமையை ஒழித்து உலகில் சாதனை புரிய உழைப்புத்தான் தேவை. ஒவ்வொருவரும் கடுமையாக உழைத்தால் வறுமையை ஒழிக்கமுடியும்'' திரு. கிளிம் மூன்றுமுறை வான்வெளியில் பறந்து சாதனை புரிந்தவர். ரஷ்ய விமானப் படைத் தளபதிகளில் ஒருவர். பாராளுமன்ற எம். பியும் கூட. (16)

## உதைபந்தாட்டப் போட்டிகள்

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் கழகங்களுக்கிடையே நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியின் அரை இறுதி ஆட்டங்கள் பாஷையூர் விளையாட்டுத் திடலில் இடம்பெற்ற பொழுது - ஒரு போட்டியில் பாஷையூர் சென் அந்தனீஸ் அணியை, குருநகர் ச. ச. நி. அணி 3க்கு பூஜ்ஜியம் என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்தது.

நடுவராக ஏ. தேவராசாவும் உதவி நடுவர்களாக ஜீ. எம். சேபஸ்தியாம்பிள்ளை, எம், பிரான்சிஸ் ஆகியோரும் கடமையாற்றினார்கள்.

மற்றொரு கால் இறுதி ஆட்டத்தில் நாவாந்துறை சென் மேரிஸ் அணி விளையாடாமலே 'வாக் ஓவர்' முறையில் வெற்றிபெற்றது.

இப்போட்டித் தொடரில் சென் மேரிஸ் அணியும் குருநகர் ச. ச. நி. அணியும் மோதும் இறுதி ஆட்டம் எதிர் வரும் முதலாம் திகதி பாஷையூர் சென், அந்தனீஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளதாக விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ. எம். ஜே. ராயசிங்கம் தெரிவித்தார். (16)

## குடும்பச் சச்சரவு; மனைவியின் மரணத்தில் முடிந்தது

கணவன் மனைவிக்கு இடையில் ஏற்பட்ட சச்சரவு மனைவியின் மரணத்தில் முடிந்தது.

பாஷையூர் - வசந்தபுரத்தில் நிகழ்ந்த இச்சம்பவத்தில் தாயு சூரியகுமாரி (வயது 23) என்பவரே மரணமானவராவார்.

மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டிக் கொண்ட இவர் ஆபத்தான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமுற்றார். (52)

## இன்று கூட்டம்

சுருட்டுத் தொழிலாளர் சங்கக்கூட்டம் இன்று மாலை 4.00மணியளவில் சங்கத் தலைவர் செல்லையா உருத்திரா தலைமையில் சங்கக் காரியாலயத்தில் இடம்பெறும். (74)

வசம் வைத்துக்கொள்ளப் போராடினார்கள்''.

வியட்நாமியர்கள் கெரில்லா யுத்தம் நடாத்துவதற்கு வாய்ப்பாக அங்கு காடுகளும் புதைசேறுகளும் இருந்தன. கடுமையான வறுமைக்கும் துன்பத்துக்கும் ஆளான போதிலும். பல தடைகளையும் மீறி உறுதியுடன் போரிடும் வரலாறு கொண்டவர்கள் வியட்நாமியர்கள். எந்த மூன்றாம் உலக நாடுகளுடனும் ஒப்பிடும்போது வசதியான வாழ்க்கைத் தரம் கொண்டவர்களாக ஈராக்கியர்கள் இருந்தார்கள்.

இந்தத் தப்புக் கணக்கிற்கு முப்படைகளின் தாக்குதலுக்கும் இலக்கான சதாம் ஹுசைனின் படைகள் பெரிய விலை கொடுக்க வேண்டி இருந்தது.

'இந்தியா ருடே' இல் இருந்து ;எஸ். பி.

## அருள் நீராடும் அன்னை

செந்நெல் கொழிக்கும் செழிப்பான சங்கரத்தை
பொன்னாரத் தோடு பூவாரமுஞ் சூடி
அன்னம் பாலித்தெம் அவலங்களை அறுக்கும்
அன்னை அருள்நீர் ஆடுகிறாள், வாருங்கள்!

கங்கைக்குளத்தெதிரே களிப்போடுறைகின்றாள்
பொங்கும் அரவாட புன்னகைசெய் மாகாளி
குங்குமத்தாள் எங்கள் குறையாவும் போக்கிடுவாள்

சங்கரத்தை வந்தாள் தான்தொழுவோம்,
வாருங்கள்!

(இன்று சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் தீர்த்தம்)

— சி. சபாநாதன்

## பல்கலைக்கழகத்தில் பாரதிதாசன் நூற்றாண்டு விழா

காலத்தை உருவாக்க வல்லவர்கள் சில கவிஞர்கள்; கம்பன், பாரதிபோன்றோர் அத்தகைய மகாகவிகள், பாரதிதாசனும் காலம் உருவாக்கிய கவிஞரே! தன் நாட்டின் மீது; இனத்தின் மீது; மொழியின் மீது; சமூகத்தின் மீது; அக்கறை கொண்டவர்; புதிய தலைமுறைக்கும் புத்துணர்வூட்டியவர்; இவை, அவரை நூற்றாண்டுவிழாக் கொண்டாடத் தகுதியுடையவராக்கின.

எத்தகைய காலமும் சூழலும் கனக. சுப்புரத்தினத்தைப் பாரதிதாசனாக்கியதோ அத்தகைய காலமும் சூழலும் இந்த ஈழநாட்டை இன்று இருள்படச் செய்திருக்கின்றன; பாரதிதாசனுடைய கவிதைத் தேவையை அதிகரிக்கச் செய்து விட்டன.

இன்றைக்கு இங்கே எங்கள் தமிழ் என்றும் எங்கள் இனம் என்றும், எங்கள் மண் என்றும் குரல் எழுப்பும் ஒரு இளம் தலைமுறையின் வித்தினைப் பாரதிதாசனிற் காண்கிறோம். சுதந்திரமும், தன்மானமும் உயிரினும் மேலானவை என்ற உண்மையை ஊட்டி நிற்கும் பாரதிதாசன் இன்று எங்கள் நன்றிக்குரிய நாயகனாக நிற்கிறார்.

"தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத்
தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்"

என்று தமிழ் மீதும்

"வண்மைசேர் தமிழ் நாடெங்கள் நாடு"

என்று தமிழ் மண்மீதும் பற்றை ஊட்டி நிற்பன அவரது கவிதைகள்.

தமிழ் மண்ணில் வாழும் தமிழரெல்லோரும் கல்வியிலும், கலைகளிலும், வீரத்திலும், அன்பிலும், பண்பிலும், தொழில் நுட்பத்திலும் சிறந்தவராக

'ஓங்கிடும் கீர்த்திஎய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டல் எந்நாளோ?"

அவர் கொண்ட ஏக்கம் இன்றைக்கும் எம் உள்ளங்களிலும் எழ வேண்டிய ஏக்கங்களே!

கவிஞர் தன் மொழிக்கும், மண்ணுக்கும் இடர் செய்தவர்களைத் தன் எதிரிகளாகக் கருதினார். அத்தகையவர்களின் ஆட்சியின் கீழ் தனது மண் அடங்கி நிற்பதை ஏற்க அவர் உள்ளம் மறுத்தது.

"விடுதலை பெறுவது முதல் வேலை
அடிமையில் உழல்வது முடியாது
விழிதுயில்வது மிகு தவறாகும்
எழுவீரே!"

என்று தமிழினத்துக்கு அவர் ஊட்டிய எழுச்சி உணர்வு இன்றைக்கும் இங்கே தேவைப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது

"அனைவரும் உறவினர் தமிழ் நாட்டார்
அனைவரும் ஒரு நிகர் தவறாமல்
அலைகடல் என எழு இதுவேளை"

என அவர் சுட்டிய வேளை இன்றைய வேளைபோல் அல்லவா இருக்கிறது!

இனத்துள் ஒற்றுமை இல்லையேல் விடிவில்லை என்பது பாரதிதாசனது சித்தாந்தம்.

ஒற்றுமையின் தேவை தெரியவே அவருக்கு அன்பின் தேவையும் புரிந்தது.

"அன்பால் உன்னத இமமலைபோல்
ஓங்கிடும் கீர்த்தி எய்தி இன்புற" வேண்டும்

என விழைகிறார்.

அந்த அன்பில் விளைகிறது சமரச உணர்வு.....

"எல்லார்க்கும் தேசம், எல்லார்க்கும் உடைமை எலாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகவே!
எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்த்திடுக!

★ ஜப்பானிய தூதுக்குழு அறிவிப்பு

# வட, கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு இல்லாது தெற்கில் அபிவிருத்தி காணுதல் முடியாது

வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காணாது தெற்கில் அபிவிருத்தித் திட்டத்தை செயற்படுத்துவது கடினமான காரியம் இவ்வாறு கொழும்பு வந்துள்ள ஜப்பானிய பொருளாதார தூதுக்குழு அரசிடம் எடுத்துக் கூறியுள்ளது.

இத்தூதுக்குழு முன்னர் இலங்கையில் தங்கியிருந்த காலத்தில் மேற்கொண்ட ஆய்வை தொடர்ந்தே இந்த முடிவை ஜப்பானியக்குழு அறிவித்துள்ளது.

ஜப்பானிய தூதுக்குழுவின் இந்த அறிவிப்பு அமைச்சரவை மட்டத்தில் ஆராயப்பட்டதாகவும், வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு எந்தவகைய தீர்வை முன்வைக்கலாம் என அரச ஆலோசிப்பதாகவும் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

## கணித, விஞ்ஞான ஆங்கில ஆசிரியர் ஒப்பந்த அடிப்படையில்

யாழ் மாவட்டத்திலிருந்து சுய விருப்பில் ஓய்வு பெற்ற கணித, விஞ்ஞான, ஆங்கில ஆசிரியர்களுக்கு அடுத்த மாதம் முதல் மீண்டும் நியமனம் வழங்க கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

ஒப்பந்த அடிப்படையிலேயே இவர்களுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நியமனக் கடிதங்கள் கல்வித் திணைக்களத்தால் விரைவில் வழங்கப்படவுள்ளது. (74)

## மன்னார் அரச அதிபராக அமிர்தலிங்கம் நியமனம்?

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம். செபநாயகம் ஓய்வுபெறுவதையடுத்து புதிய அரச அதிபராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு அமிர்தலிங்கம் நியமிக்கப்படவுள்ளதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இதேபோல யாழ்மாவட்டத்திலுள்ள உயர் அதிகாரி ஒருவர் வடக்குக்கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர்களில் ஒருவராக பதவி உயர்வு பெற்று செல்லவிருப்பதாகவும் கொழும்புச்செய்திகள் கூறுகின்றன. 33

## மருதங்கேணி ஆஸ்பத்திரியில் மீண்டும் உணவு விநியோகம்

மருதங்கேணி வைத்தியசாலையில் தங்கியுள்ள நோயாளிகளுக்கு இந்த வாரம் தொடக்கம் மீண்டும் உணவு வழங்கப்படுகின்றது.

கடந்த மூன்று மாதங்களாக இவ்வைத்தியசாலையில் தங்கியுள்ள நோயாளிகளுக்கு உணவு வழங்கப்படாமை குறிப்பிடத்தக்கது.

மருதங்கேணி வைத்தியசாலையில் தங்கியுள்ள நோயாளிகளுக்கு உணவு வழங்கப்படுவதில்லை என்று "முரசொலி" செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

## காஷ்மீரில் தியாகிகள் தினம்

காஷ்மீரில் கடந்த மூன்று ஆண்டுகளாக இந்திய ராணுவத்தினருடனான மோதலில் மரணமடைந்த போராளிகளின் நினைவு தினம் இன்று அம்மாநிலத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது. தியாகிகள் தினத்தை முன்னிட்டு அங்கு ஹர்த்தாலும் அனுஷ்டிக்கப்படுகிறது.

### மட்டக்களப்பு...

விக (பெண்டிச்ராஜன் எனிவரன் ராதாகி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு) வீரமரணமடைந்தார்.

இதன் பின்பு இராணுவத்தினர் கிருஷ்ணபிள்ளை என்பவரின் வீட்டை எரித்ததுடன், உபதபால் அதிபர் சண்முகராசா, ஆரையம்பதி சிவனேசன் ஆகியோரைக் கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர். (71)

### மட்டு. நகர்...

மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

முதலில் இருதயபுரம் பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டபோது நகரில் இருந்து பொலிஸார் உதவிக்கு வரவழைக்கப்பட்டனர்.

இதைத்தொடர்ந்து மட்டக்களப்பு நகர்ப்பகுதியில் பாதுகாப்பு உஷார்படுத்தப்பட்டுள்ளது.

### திட்டமிட்டபடியே–

மாவீரர் கலை கலாசாரப் பிரிவினரால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசு வழங்கல் சாவகச்சேரியில் நடைபெறும்.

13-ந் திகதி நெல்லியடியில் முத்தமிழ் விழா மலர் வெளியிடப்படும்

15-ந் திகதி தமிழீழ தேசிய விருது வழங்கப்படும்,

வன்னி, மன்னார் பகுதியில் இருந்தும் படைப்புகள் அரங்கேறவுள்ளன.

6-ந் திகதி முதல் 15-ந் திகதி வரை ஓவியக்கண்காட்சி பிற்பகல் 2மணி முதல்6மணிவரை யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். (71)

### பம்பலப்பிட்டி...

சம் ரொக்கப்பணம் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பாக சிங்கப்பூர் வாசி ஒருவரும், இவருக்கு உடந்தையாக இருந்த இரு

### இராணுவம்...

வீச்சால் சேதமான கட்டிடங்களை துப்புரவு செய்யும் வேலைகளிலும் ஈடுபட்டுவருகின்றன.

இதேவேளை தமக்கு பாதுகாப்பு கருதி சில வீடுகளை தகர்த்துள்ளனர். அதில் க. உருத்திரமூர்த்தியின் வீடும் அடங்கும். (48)

### முஸ்லிம்...

சார்பில் நான்கு தமிழரும் சுயேட்சையாக இரு தமிழரும் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்தனர்.

### தாண்டிக்குள...

பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

புலிகள் தரப்பில் 7 போராளிகள் வீரமரணத்தை தழுவிக்கொண்டனர்.

லெப்- துஷ்யந்தன் (பொன்னையா தவபாலன் பூந்தோட்டம்), 2வது லெப்- அலெக்ஸ் (சோமசுந்தரம் தனபாலசுந்தரம்), வள்ளல் (குமாரச்சந்திரன், கிளிநொச்சி), பெனா (மகாலிங்கம் மூத்தராசா, வவுனியா), கிறி (சிவலிங்கம் பெருமாள், வவுனியா), சுகிர்தன் (கந்தையா யோகராசா, வவுனியா) வரதன் (ச. சுப்பிரமணியம் ஓயார் வவுனியா) இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (71)

## 'குழந்தைக் கவி அமுதம்' வெளியீட்டு விழா

பத்துவயது பாலகவி த. தர்மேந்திரா எழுதிய குழந்தைக் கவி அமுதம் நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்றரை மணிக்கு நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரபல எழுத்தாளர்கள், கவிஞர்கள், அறிஞர்களின் வாழ்த்துரைகளும் ஆசியுரைகளும் இடம் பெறவுள்ளன. (42)

### கீரிமலையில்...

இதேவேளை பலத்த ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டன இவை இளவாலை, மயிலங்கூடல், முள்ளானை பகுதிகளில் விழுந்து வெடித்தன. (48

### வட-கிழக்கில்...

காங்கேசன் துறைமுகத்தை போராளிகளின் தாக்குதலில் இருந்து பாதுகாக்கவே எடுக்கப்பட்டதாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

### திருமலை...

வாகவுள்ளது.

ரஞ்சனின் கொலைக்குப் பின்னர் திருமலையில் நெருக்கடி நிலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வந்தவர்

அந்த அன்பில் விளைகிறது சமரச உணர்வு.....

"எல்லார்க்கும் தேசம், எல்லார்க்கும் உடைமை எலாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகவே!
எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்த்திடுக!
எல்லார்க்கும் நல்ல இதயம் பொருந்திடுக!
எல்லார்க்கும் மற்றுள்ள செல்வர்க்கும் நாட்டுடைமை
வாய்க்கரிசி என்னும் மனப்பான்மை போயொழிக;
எல்லார்க்கும் நல்ல நுதல் மாதர் எல்லார்க்கும்
விடுதலையாம் என்றே மணிமுரசம் ஆர்ப்பீரே!"

இத்தகைய உயர்ந்த இலட்சியத்தின் நிறைவாகத்தான் பாரதிதாசன் நூற்றாண்டு நிறைவைக் கொண்டாட வேண்டும் என்று எமது மன்றம் விரும்பியது. அந்த விழாவிலே ஈழத்தின் தலைசிறந்த அறிஞர்களும் கலைஞர்களும் கலந்து சிறப்பிக்கிறார்கள். விழாவுக்கு தமிழபிமானிகள் அனைவரையும் இருகரம் கூப்பி வரவேற்கிறோம்.

க. இரகுபரன்

— தலைவர், தமிழ் மன்றம்


## விற்பனைக்கு

பிறவுண் பேப்பர் (Brown Paper) மொத்தமாக உடன் விற்பனைக்கு. தொடர்பு கொள்க.

**முரசொலி**

டச்சு வீதி, கல்வியங்காடு

03138


இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சு வீதி லஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 30-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

...ழைக்கப்பட்டனர்.

இதைத்தொடர்ந்து மட்டக்களப்பு நகர்ப்பகுதியில் பாதுகாப்பு உஷார்படுத்தப்பட்டுள்ளது.

### ராஜீவை...

வளித்துள்ளன.

டில்லியில் உள்ள நண்பரிடம் இருந்து எனக்கு பணம் வரவேண்டியுள்ளது. நான் ரகசியமாக ஏறி புதுடில்லி செல்லப்போகிறேன் என வரதராஜப்பெருமாள் கூறியதை அடுத்து அவருக்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருப்பதுடன் வெளியூர்களுக்கு அனுமதியின்றி செல்லவேண்டாம் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

### ராணுவத்திடம்...

செய்த ராணுவ அதிகாரி, நாம் மூன்று நாட்களால் போய்விடுவோம் அதுவரை எம்முடன் இருக்கவேண்டும் இப்போது போனால் எமது சிப்பாய்கள் சுட்டுவிடுவார்கள் என்று தமிழில் கூறினாராம்.

இதேநேரம் திருமதி நடராசா மீனாட்சிப்பிள்ளை என்ற (குருக்களின் மனைவி) வயோதிபப்பெண் 96) ராணுவத்தினர் இருப்பது தெரியாது அப்பகுதிக்கு சென்றபோது அவரைத்திரும்பிச் செல்லுமாறும் படையினர் கூறித்திருப்பி அனுப்பினர் 48)

...சம் ரொக்கப்பணம் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பாக சிங்கப்பூர் வாசி ஒருவரும், இவருக்கு உடந்தையாக இருந்த இரு நேபாள வாசிகளும் கைதாகி விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

1986 ஆம் ஆண்டு முதல் இந்த வியாபாரம் நடந்து வந்துள்ளதாக விசாரணையின்போது தெரியவந்துள்ளது. (11)

### வடமராட்சி...

விடுதலை செய்யப்பட்டவர்கள் உடுத்துறையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மகேந்திரன், வேலுப்பிள்ளை வெற்றிவேலாயுதம் செல்லத்துரை சுந்தரலிங்கம் ஆகிய மூவருமாவர்.

இவர்கள் மூவரும் சென்ற மாதம் வடமராட்சிக் கிழக்கு கடற்பிரதேசத்தில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். (43)

### தொகுதி...

இதேவேளை நேற்றுமுன்தினமிரவு அமைச்சர் சுப்பிரமணியசுவாமி செல்வி ஜெயலலிதாவுடன் ஜனதாதள்(எஸ்) கட்சியின் கூட்டு குறித்து பேச்சு நடாத்தியுள்ளார். நேற்றுக் காலை திடீர் என அவர் புதுடில்லி புறப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

...), சுஜீதன் (கந்தையா யோகராசா, வவுனியா) வரதன் (ச. சுப்பிரமணியம் ஓயாசீ வவுனியா) இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (71)

### திருமலை...

வாகவுள்ளது.

ரஞ்சனின் கொலைக்குப் பின்னர் திருமலையில் நெருக்கடி நிலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர். (43)

# காலமானார்

## கதிர்காமர் வேலாயுதபிள்ளை

முன்னைநாள் இரத்தினபுரி பிரபல வர்த்தகர் வே. வேலாயுதபிள்ளை காலமானார், இவர் புங்குடுதீவு 8-ம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும். முன்னாள் இராஜா ஸ்ரோர் உரிமையாளரும் காலஞ்சென்ற கதிர்காமர் சிதம்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் அன்னப்பிள்ளையின் மருமகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், அருந்ததி: லோகராசா (சுவிஸ்) தவராசா (சட்டத்தரணி கொழும்பு) கேதாரகௌரி, யோகராசா (சுவிஸ்) உமாதேவி (சுவிஸ்) கனகராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சர்வானந்தன் (கல்வி அலுவலகம், மன்னார்) ஞானவேல் (வர்த்தகர்) சாந்தி, கௌரிசங்கரி (சட்டத்தரணி — கொழும்பு) மல்லிகாதேவி (சுவிஸ்), தவச்செல்வம், (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் ரமேஷ் (சுவிஸ்) பிரியதர்சினி, மிருணாளினி, இந்துஜா ஐஸ்வியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு அன்னாரது மடத்துவெளி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக மணல்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் உற்றார் உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பா. ஞானவேல்
புங்குடுதீவு. 8.

03133